# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,616 — 1940 ம் ஞு வைகாசிமீ 24 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அசாட்சியாரின் விளம்பரங்கள்.

M. L. A.—B 1768
L. D.—B 140/29

#### நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டம்.

*நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டத்தின் (அதி : 334) 4 ம் பிரிவின் படி களுத்துறை நகரசங்கத்தின் காரியபாகம் நடத்தும் எல்லைக்குள் வழங்குவதற்காக, அதன் பொருட்டு முறைமையான அதிகாரியால் அதாவது களுத்துறை நகரசங்கத் தலைவரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.*

பி. எ. கூறே,
நகரசங்கத் தலைவர்.

நகர சங்கக கந்தோர்,
களுத்துறை, 1940 ம் ஞு மேமீ 17 ந் வ..

#### உபவிதிகள்.

1. இவ்வுபவிதிகளில் "தலைவர்" என்பது களுத்துறை நகர சங்கத் தலைவர் எனப்பொருள்படும். "வருடாந்தப் பதிவு வேதனம்" என்பது சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இறுக்கப்படவேண்டிய வருடாந்தப் பதிவு வேதனம் எனப் பொருள்படும். "சொந்தக்காரன்" என்பது ஒரு நாய் சம்பந்தமாக, அந்நாயைத் தன் பாதுகாவலில் அல்லது உடைமையாக வைத்திருப்பவனையும் உளப்படுத்தும்.

2. (1) 6 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய யாதேனுமொரு நாய் வைத்திருக்கப்படும் எந்த வீட்டிலேனும் வளவிலேனும் குடியிருப்பவர், இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் விவரத் திரட்டொன்றினை ஒவ்வொரு வருடத்திலும் பங்குனிமீ 1 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) எவ்வருடத்திலாவது பங்குனிமீ 1 ந் தேதிக்குப் பின்னர் எவராவது எந்த வீட்டிலேனும் வளவிலேனும் ஒரு நாயை வைத்திருக்க தொடங்குமிடத்து, அத்தகைய வீட்டில் அல்லது வளவில் குடியிருப்பவர் இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் மேலதிகமான விவரத்திரட்டொன்றினை உடனே தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

3. வருடாந்தப் பதிவு வேதனம்,—

(*a*) 2 (1) ம் உபவிதியின்படி விவரத்திரட்டு அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில், எந்த வருடத்துக்குக் கட்டவேண்டுமோ அவ்வருடத்தின் சித்திரைமீ 1 ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் ; அல்லது

(*b*) 2 (2) ம் உபவிதியின்படி மேலதிகமான விவரத்திரட்டொன்று அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில், அத்தகைய மேலதிகமான விவரத்திரட்டு அனுப்பிய திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், ஒவ்வொரு நாயின் சொந்தக்காரனால் கட்டப்பட வேண்டும்.

4. வருடாந்தப் பதிவு வேதனம் கட்டியதும், தலைவர், அந்த நாயின் சொந்தக்காரனுக்கு—

(i.) பதிவுச் சான்றுரைப்பத்திர மொன்றையும்,

(ii.) பதிவுச் சான்றுரைப் பத்திரத்தின் இலக்கம் குத்தப்பெற்ற ஓர் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப்பட்டியையும், கொடுப்பார்.

ஆயின் பதிவு செய்வதற்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டுள்ள எந்த நாயினையும் தலைவர், தமது பார்வைக்குக் கொண்டுவரும்படி கேட்கலாம். மேலும்,

(*a*) அந்த நாய் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின் ; அல்லது

(*b*) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி, வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் அங்கவீனப்பட்டு அல்லது நோய்வாய்ப் பட்டு அல்லது பிறநாய்களுக்கு நோய் தொற்றும்வாயிலாக நோய்வாய்ப்பட்டிருப்பின், அல்லது

(*c*) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட்டிருப் பின் அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின் ; அந்த நாய்க்கு பதிவுச் சான்றுரைப்பத்திரத்தையும் உலோகத்தகட்டினை அல் லது கழுத்துப்பட்டியையும் கொடுக்க மறுக்கலாம்.

5. யாதேனுமொரு நாய்க்கு பதிவுச்சான்றுரைப்பத்திரம் கொடுபட்ட பின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தல் கொடுத்தபின்னர்,

(*a*) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்குத் தகுதி யற்ற முறையில் அங்கவீனப்பட்டதாகி அல்லது நோய்வாய்ப் பட்டதாகி விடின் ; அல்லது

(*b*) அந்த நாய், சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப் பட்டிருப்பின் அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(*c*) அந்த நாய், தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப் பட்டிருக்கும் பொழுது, வேறெந்த நாயுடனும் ஊடாடித் திரியச் சொந்தக்காரன் விட்டிருப்பின்,

(*d*) அந்த உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டியின்றி அலைந்து திரியக் காணப்படின்,

அத்தகைய பதிவுச்சான்றுரைப்பத்திரத்தைத் தலைவர் அழித்துவிடலாம்.

6. (1) 4 ம் உபவிதியின்படி பதிவுச் சான்றுரைப் பத்திரம் மறுக்கப் பட்ட அல்லது 5 ம் உபவிதியின்படி அழிக்கப்பட்ட யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், தலைவர், அறிவித்தற் பத்திரம் அனுப்பியதும். அவ்வறிவித்தலிற் குறிப்பிட்டிருக்கும் நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்டுசென்று காட்டவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நாயும் தலைவர் தகுதியெனக் கருதும் வகையில் அழிக்கப்படலாம் அல்லது விநியோகிக்கப்படலாம்.

7. உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்றுள்ள யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், அந்த நாய் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பதிவுச் சான்றுரைப்பத்திரம் பெலப்புடையதாகவிருக்கும் காலம் முழுவதும் அந்த உலோகத்தகட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாயின் கழுத்தில் பத்திரமாய் அணிவித்துக்கொள்வதற்கேற்ற வழிவகைகள் யாவற்றையும் கையாளவேண்டும்.

8. இந்த் உபவிதிகளின்படி தலைவருக்குரிய தத்துவங்கள் எல்லாவற்றையேனும் அவற்றுள் எதையேனும் செலுத்துதற்கு அவர் எவருக்காவது எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கலாம்.

9. 1929 ம் ஆண்டு நவம்பர்மீ 8 ந் தேதியைக்கொண்ட 7,744 ம் இலக்க கெசற் பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பெற்ற, நாய்களைப் பதிவு செய்தலைப்பற்றிய உபவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

அட்டவணை.

மாதிரிப்பத்திரம்.

| | |
|---|---|
| இல :———. | இல :———. |
| வீட்டிலக்கம் : ———. | 19—ம் ஆண்டு பங்குனிமீ 1ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பூரணப் படுத்தி தலைவருக்கு அனுப்பப்பட வேண்டிய விவரணத்திரட்டு :———. |
| தெரு : ———. | வீட்டிலக்கம் :———. |
| கிராமப்பெயர் : ———. | தெரு : ———. |
| தோட்டப் பெயர் :———. | கிராமப் பெயர் :——— |
| குடியிருப்பவரின் பெயர் :———. | தோட்டப் பெயர் :———. |
| | குடியிருப்பவரின் பெயர் :———. |

| வைத்திருக்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | குறிப்பு | சொந்தக்காரனின் பெயர் | அடுத்த சித்திரைமீ 1 ந் திகதி யன்று அல்லது அதற்குமுன் கட்டவேண்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் சுற்றளவு | விசேஷ அடையாளங்கள் | | | |
| | | | | | | | | |

ஒப்புவித்த தேதி : 19— ம் ஆண்டு—

ஒப்புவித்த தேதி :
19— ம் ஆண்டு

———
குடியிருப்பவரின் கையொப்பம்.

———
ஒப்புவித்தவரின் கையொப்பம்.

உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் இந்த விவரணத் திரட்டினைப் பூரணப்படுத்தி யனுப்பத்தவறின் 20 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்குப் பாத்திரராக வேண்டி வரும்.

M. L. A.—B 1003.
L. D.—B 25/40.

**நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டம்.**

நாய்களைப் பதிவுசெய்யதற்கான சட்டத்தின் (அதி. 334) 4 ம் பிரிவின் படி களுத்துறைப் பகுதியின் சௌக்கியாதார சங்கப்பட்டணங்களாகிய ஹொறன, வாதுவ, அளுத்கம, தெபுவான, நாபொட, அகளவத்த, ஆகிய இப்பட்டணங்களின் எல்லைக்குள் வழங்குவதற்காக அதன் பொருட்டு முறைமையான அதிகாரியால் அதாவது களுத்துறைப் பகுதிச் சுகாதாரச் சங்கத் தலைவரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

எச். ஈ. தென்னகூன்,
சௌக்கியாதார சங்கத் தலைவர்.

சௌக்கியாதார சங்கக் கந்தோர்,
1940 ம் ஆண்டு வைகாசிமீ 15 ந் உ.

உபவிதிகள்.

1. இவ்வுபவிதிகளில் " தலைவர் " என்பது களுத்துறைப் பகுதி சௌக்கிய சுகாதாரச் சங்கத்தலைவர் எனப்பொருள்படும். வருடாந்தப் பதிவுவேதனம் " என்பது சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இறுக்கப்பட வேண்டிய வருடாந்தப் பதிவு வேதனம் எனப் பொருள்படும். " சொந்தக்காரன் " என்பது ஒரு நாய் சம்பந்தமாக, அந்நாயைத் தன் பாதுகாவலில் அல்லது உடைமையாக வைத்திருப்பவனையும் உளப்படுத்தும்.

2. (1) 6 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய யாதேனுமொரு நாய் வைத்திருக்கப்படும் எந்த வீட்டில் அல்லது வளவில் குடியிருப்பவர், இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் விவரத் திரட்டொன்றினை ஒவ்வொரு வருடத்திலும் பங்குனிமீ 1 ந் திகதி யன்று அல்லது அதற்கு முன்னர் பொலிஸ் விதானைக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) எவ்வருடத்திலாவது பங்குனிமீ 1 ந் தேதிக்குப் பின்னர் எவராவது எந்த வீட்டிலேனும் வளவிலேனும் ஒரு நாயை வைத்திருக்க தொடங்குமிடத்து, அத்தகைய வீட்டில் அல்லது வளவில் குடியிருப்பவர் இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் மேலதிகமான விவரத்திரட்டொன்றினை உடனே பொலிஸ் விதானைக்கு அனுப்புதல் வேண்டும்.

3. வருடாந்தப் பதிவு வேதனம்—

(a) 2 (1) ம் உபவிதியின்படி விவரத்திரட்டு அனுப்பப்பட்டுள்ள, ஒரு நாய் விஷயத்தில், எந்த வருடத்துக்குக் கட்டவேண்டுமோ அவ்வருடத்தின் சித்திரைமீ 1 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், அல்லது

(b) 2 (2) ம் உபவிதியின்படி மேலதிகமான விவாதத்திரட்டொன்று அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில், அத்தகைய மேலதிகமான விவரத்திரட்டு அனுப்பிய திகதியிலிருந்து, பதினைந்து நாட்களுக்குள், ஒவ்வொரு நாயின் சொந்தக்காரனால் கட்டப்பட வேண்டும்.

4. வருடாந்தப் பதிவுவேதனம் கட்டியதும், தலைவர் அந்த நாயின் சொந்தக்காரனுக்கு—

(i.) பதிவுச் சான்றுறைப்பத்திரமொன்றையும்,

(ii.) பதிவுச்சான்றுரைப் பத்திரத்தின் இலக்கம் குத்தப்பெற்ற ஓர் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப்பட்டியையும் கொடுப்பார்.

ஆயின் பதிவுசெய்வதற்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டுள்ள எந்த நாயினையும், தலைவர் தமது பார்வைக்குக் கொண்டுவரும்படி கேட்கலாம். மேலும்—

(a) அந்த நாயைப் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின் அல்லது,

(b) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்கு தகுதி யற்ற முறையில் அங்கவீனப்பட்டு அல்லது நோய்வாய்ப்பட்டு அல்லது பிற நாய்களுக்கு நோய் தொற்றும்வாயிலாக நோய் வாய்ப்பட்டிருப்பின், அல்லது

(c) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புருத்தப்பட்டிருப் பின் அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின், அந்த நாய்க்கு பதிவுச் சான்றுரைப்பத்திரத்தையும் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப் பட்டியையும் கொடுக்க மறுக்கலாம்.

5. யாதேனு மொரு நாய்க்கு பதிவுச்சான்றுரைப் பத்திரம் கொடுபட்ட பின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தல் கொடுத்தபின்னர்—

(a) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்குத் தகுதி யற்ற முறையில் அங்கவீனப்பட்டதாகி அல்லது நோய்வாய்ப்பட்ட தாகிவிடின், அல்லது

(b) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட் டிருப்பின், அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின், அல்லது

(c) அந்த நாய் தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப் பட்டிருக்கும்பொழுது வேறெந்த நாயுடனும் ஊடாடித்திரியச் சொந்தக்காரன் விட்டிருப்பின்,

(d) அந்த உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டி யின்றி அலைந்து திரியக் காணப்படின்,

அத்தகைய பதிவுச் சான்றுரைப் பத்திரத்தைத் தலைவர் அழித்து விடலாம்.

6. (1) 4 ம் உபவிதியின்படி பதிவுச்சான்றுரைப்பத்திரம் மறுக்கப் பட்ட அல்லது 5 ம் உபவிதியின்படி அழிக்கப்பட்ட யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், தலைவர் அறிவித்தற் பத்திரம் அனுப்பியதும், அவ்வறிவித்தலிற் குறிப்பிட்டிருக்கும் நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்சென்று காட்டவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நாயும் தலைவர் தகுதியெனக் கருதும் வகையில் அழிக்கப்படலாம் அல்லது விநியோகிக்கப்படலாம்.

7. உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்றுள்ள யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், அந்த நாய் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பதிவுச் சான்றுரைப்பத்திரம் பெலப்புடையதாகவிருக்கும் காலம் முழுவதும் அந்த உலோகத்தகட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாயின் கழுத்தில் பத்திரமாய் அணிவித்துக்கொள்வதற்கேற்ற வழிவகைகள் யாவற்றையும் கையாளவேண்டும்.

8. இந்த உபவிதிகளின்படி தலைவருக்குரிய தத்துவங்கள் எல்லாவற்றையேனும் அவற்றுள் எதையேனும் செலுத்துதற்கு அவர் எவருக்குகாவது எழுத்துமூலம் அதிகாரம் கொடுக்கலாம்.

9. 1934 ம் ஆண்டு தைமீ 19 ந் தேதியைக்கொண்ட 8,028 ம் இலக்கக் கெசற் பத்திரிகையிலும் பிரசுரம் செய்யப்பெற்ற நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய உபவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

அட்டவணை.

மாதிரிப்பத்திரம்.

| | |
|---|---|
| இல.————. | இல.————. |
| வீட்டிலக்கம் :————. | 19— ம் ஞூ பங்குனிமீ 1 ந் தேதியன்று அல்லது முன்னர் பூரணப்படுத்தி தலைவருக்கு அனுப்பப்பட வேண்டிய விவரத்திரட்டு :————. |
| தெரு :————. | வீட்டிலக்கம் :————. |
| கிராமப் பெயர் :————. | தெரு :————. |
| தோட்டப்பெயர் :————. | கிராமப் பெயர் :————. |
| குடியிருப்பவரின் பெயர் :————. | தோட்டப் பெயர் :————. |
| | குடியிருப்பவரின் பெயர் :————. |

| வைத்திருக்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | குறிப்பு | சொந்தக்காரனின் பெயர் | அடுத்த சித்திரைமீ 1 ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டவேண்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆண் பெண் | நிறம் | கழுத்தின் சுற்றளவு | விசேஷ அடையாளங்கள் | | | |
| | | | | | | | | |

ஒப்புவித்த தேதி :
19— ம் ஞூ—

ஒப்புவித்த தேதி :
19— ம் ஞூ

குடியிருப்பவரின் கையொப்பம்.

ஒப்புவித்தவரின் கையொப்பம் :

உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் இந்த விவரணத் திரட்டினைப் பூரணப்படுத்தியனுப்பத் தவறின 20 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்குப் பாத்திரராக வேண்டிவரும்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 2,186 (கொழும்பு).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1940 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 24 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு எவரேனும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1940 ம் ஞூ (ஏப்றில்) சித்திரைமீ 16 ந் தேதியிலன்று கொழும்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

எல். எஸ். பி. பெறேரு,
மேலதிக உதவி அரசாட்சி ஏசன்றர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மேல் மாகாணம் ஏசன்றர் அவர்களிடமிருந்தும் அதன் அளவைப்படம் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக வெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ்ச்சொல்லப்படுங் காண்த்துண்டுகள் மேல் மாகாணத்தில், கொழும்பு டிஸ்திறிக்கில், ஹாப்பிற்றிகம் கோறளையில், உடுகஹபத்துவவில் போத்தல இஹலகம என்னுங் கிராமத்திவிருக்கின்றன :—

I.—காட்டளவைப் பிரதமபட இல. 64.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 30 | விலிக்குலக்கந்த (உனுதொலஎல ஓரத்திலுள்ள சேமிக்கை) .. | .. 0 3 30 |

எல்லைகள் : வடக்கு-ஐ. புஞ்சி நோனுவாலும் மறுபேராலும் உரித்தாடப்படுங் காணி தத்துவப்படம் 182,294) ; கிழக்கு-உனுதொல எல ; தெற்கு-64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 31 ம் இலக்கத் துண்டு (விலிக்குலக்கந்த) ; மேற்கு-262,002 ம் இலக்கத் தத்துவப் படத்தில் ஜீ. எபிரகாம் அப்புஹாமியால் உரித்தாடப்படும் பறந்தறஹேனவும், 13,545 ம் இலக்கப் பிரதமபடத்தில் 23,017 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த கெலே).

II.—காட்டளவைப் பிரதமபட இல. 64.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 29 | விலிக்குலக்கந்த (காலடிப் பாதைக்காகவுள்ள சேமிக்கை) .. | .. 0 0 23 |
| 31 | விலிக்குலக்கந்த .. | ..137 0 10 |
| 37 | ஷை (உனுதொலஎல ஓரத்திலுள்ள சேமிக்கை) .. | .. 0 1 0 |
| | | 137 1 33 |

எல்லைகள் :—வடக்கு-184,649 ம் இலக்கத் தத்துவப்படத்தில் ஐ. பீறிசால் உரித்தாடப்படும் படலும்பிற்றியா என்னுங் காணியும், 20,207 ம் இலக்கப் பிரதமபடத்தில் 2 ம் இல்க்கத் துண்டும் (கசுகஹஹேன), 20,207 ம் இலக்கப் பிரதமபடத்தில் இமியறல்லகே புஞ்சி நோனுவால் 23,223 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் 3 ம் இலக்கத் துண்டும் (கசுகஹவத்த), 20,207 ம் இலக்கப் பிரதமபடத்தில் போடிபக்ச கறுணவல்லப நனதுங்கவால் 22,945 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் 4 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த அல்லது கசுகஹஹேன), போடிபக்ச கறுணவல்லைப் பீற்றட் அப்புஹாமியாலும் மறுபேராலும் 129,938 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படுங் கசுகஹஹேன என்னுங் காணியும், A141 ம் இலக்கப் பிரதமபடத்தில் 2 ம் இலக்கத் துண்டும் (படுலம்பிற்றியவத்த) A141 ம் இலக்கப் பிரதம படத்தில் டபிள்யு. ஐ. பீறிசால் T 17,672 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் 1 ம் இல்க்கத் துண்டும் (படுலம்பிற்றியவத்த), 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 27 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த) போத்தலஇஹலகமவிலிருந்து பலத்தோவாவுக்குச் செல்லும் காலடிப்பாதையும் ; கிழக்கு-போத்தலஇஹலகமவிலிருந்து பலத்தோவாவுக்குச் செல்லுங் காலடிப்பாதையும், அந்தகலஎலவும் சப்பிரகாம மாகாணத்தின் எல்லையும் ; தெற்கு-சப்பிரகாம மாகாணத்தின் எல்லையும், எம். சீஞ்சியாவாலும், பீ. ஏ. ஜோசெவ் அப்புஹாமியாலும் 170,431 ம், 254,147 ம் இலக்கத் தத்துவப் படங்களில் உரித்தாடப்படுங் கொஸ்ஹீன்னவத்த என்னுங் காணியும், 64 ம் இலகக்க் காட்டளவைப் பிரதமபடத்தில் 34 ம் இலக்கத் துண்டும் (கொஸ்ஹீன்னவத்த) 33 ம் இல்க்கத் துண்டும் (தன்னஹேனவத்த) 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில், போத்தல இஹலகமவிலிருக்கும் போடிபக்ச ஜேமிஸ் அப்புஹாமியாலும், போடிபக்ச தர்மதாசாவாலும் T 22,669 ம் இலக்கத் தத்துவப்படத்தில், உரித்தாடப்படும் 32 ம் இலக்கத் துண்டும் (தென்னஹேனவத்த) உனுதொலஎலவும், பீ. ஜேமிஸ் அப்புஹாமியாலும், பீ. பீற்றர் அப்புஹாமியாலும், பீ. ஏ. அறுநோளிஸ் அப்புஹாமியாலும் 129,957 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படுங் கொஸ்சின்னதெனிய என்னுங் காணியும், 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் பி. ஜேமிஸ் அப்புஹாமியால் T 22,706 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் 38 ம் இலக்கத் துண்டும் பின்னஹேனவத்த அல்லது (விலிக்குலக்கந்த), 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 39 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலந்த) போத்தல இஹலகமவிலிருந்து வறக்கப்பொலவுக்குச் செல்லும் பாதையும் ; மேற்கு-போத்தல இஹலகமவிலிருந்து வறக்கப்பொலவுக்குச் செல்லும் பாதையும், பீ. எபிரகாம் அப்புஹாமியால் 262,002 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் பறந்தறஹேன என்னுங் காணியும், 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தல் 30 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த), உனுதொலஎலவும், பீ. ஏ. ஜோசெவ் அப்புஹாமியால் 182,294 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் பொல்கஹஹேன என்னுங் காணியும்.

III.—காட்டளவைப் பிரதமபட இல. 64.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 42 | பறந்தறவத்த .. .. | .. 2 0 16 |

எல்லைகள் :—வடக்கு-64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 46 ம் இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த) 43 ம் இலக்கத் துண்டும் (பொல்கஹஹேனவத்த) ; கிழக்கு-பீ. எபிரகாம் அப்புஹாமியால் உரித்தாடப்படும் பறந்தறஹேன (தத்துவப்படம் 262,002) 13,545 ம் இலக்கப் பிரதமபடத்தில் 23,017 ம் இலக்கத் துண்டும் (பாதைக்காகவுள்ள சேமிக்கை), 64 ம் இலக்கக் காட்டளவைப் பிரதம்படத்தில் 46 இலக்கத் துண்டும் (விலிக்குலக்கந்த) ; தெற்கும் மேற்கும்-64 ம் இலக்கக் காட்டளவைப் பிரத்மபடத்தில் 46 ம் இலக்கத் துண்டு (விலிக்குலக்கந்த)

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வாதுவையில் பிரசவசாலை கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,130 குறிச்சி—மஹாவாதுவை மேற்கு.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொஸ்கஹலந்தவத்த 348 ம் 350 ம் (190) வரிப்பண நம்பர்களில் பகுதிகள் | 30 வயதுள்ள 27 தென்னைகளும், 30 வயதுள்ள 2 ஈரப்பலாக்களுமுள்ள தென்னந் தோப்பு | வாதுவையைச்சேர்ந்த தலப்பிட்டி தெற்கு வாசியான மெஸ்திகே தொன் அந்திரிஸ் குணத்திலக்கா | 0 1 15 |
| 2 | ஷை .. | 30 வயதுள்ள 2 தென்னைகளுள்ள தென்னந்தோப்பு | ஷை .. .. .. | 0 0 2·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஆண்டு (ஜூன்) ஆனி மாதம் 15 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும்சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1940 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 17 ந் உ.

எச். ஈ. றெஞ்னசூன்,
களுத்துறை மேல் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இல. சட்டம் 8 ம் விதிக்கமைய 1 ம் அட்டவணை B 2 ம் விதி.

யாழ்ப்பாணம் கரம்பன் பொன்னம்பலம் இராமலிங்கமாகிய நான் தமிழ்ப்பாஷையில் மட்டக்களப்புப் பிரிவில் கடமையாற்றுவதற்கு என்னைப் பிரசித்த நொத்தாரிசுவாக யேற்றுக்கொள்ளும்படி விண்ணப்பஞ்செய்ய விருக்கிறேனென்பதை இத்தா லறிவிக்கின்றேன்.

Karampan, Kayts,
8-5-40.

P. Ramalingam,

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.